**சுருக்கம்**

நீர்வளத்துறை – தூத்துக்குடி மாவட்டம் - தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி அமைப்பில் தெற்கு பிரதான வாய்க்கால் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தியது ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.கருப்பையா என்பவரால் தொடரப்பட்ட ஆர்பிட்ரேசன் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட நடுவர் மன்றத் தீர்ப்பின் அவார்டு தொகை ரூ.61,67,561/- மற்றும் 31.05.2022 வரை ஆண்டுக்கு 10% சதவீத வட்டி ரூ.1,14,81,659/- ஆக மொத்தம் ரூ.1,76,49,220/-க்கு நிதி ஒப்பளிப்பு அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நீர்வளத் (எஸ்.2) துறை**

**அரசாணை (டி) எண்.07** நாள்.10.01.2023

சுபகிருது, மார்கழி 26

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை :

1. அரசாணை எண். 62, பொதுப்பணி (ப்பி2) துறை, நாள் 12.02.1998.
2. அரசாணை எண். 237, பொதுப்பணி (என்2) துறை, நாள் 04.07.2002.
3. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை கடித எண். தவஅ / இவஅ / 24366 / 2019, நாள் 17.06.2021.
4. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை, கடித எண். வப / முவஅ1 / கோ.18255 /2021, நாள் 15.11.2021.

மேலும் படிக்கப்பட்டவை

5. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை கடித எண் தவஅ / சிவஅ-1 / கோ-24336 / 2019, நாள் 31.12.2021.

*_*_*

**ஆணை :**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி அமைப்பில் தெற்கு பிரதான வாய்க்கால் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் பணியை உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.72.02 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில்

இத்திட்டத்திற்கு ரூ.83.68 இலட்சத்தில் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், தாமிரபரணி பாசன அமைப்பு, தென்கால் புனரமைப்பு பணி செய்வதற்காக ரூ.72.02 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது என்றும் இப்பணிக்கான உடன்படிக்கை எண்.42SE / 98-99, நாள் 24.12.1998-ன்படி மேற்கொள்ளப்பட்டது என்றும், வேலைக்கான பணித்தளம் 27.12.1998-ல் ஒப்படைக்கப்பட்டது என்றும், ஆனால் ஒப்பந்தகாரர்களால் 10.03.1999 அன்று பணி துவங்கப்பட்டது என்றும், ஒப்பந்தகாலம் 18 மாதங்கள் ஆகும் என்றும், இரண்டு முறை கால நீட்டிப்பு வழங்கப்பட்டு 31.08.2001-ல் பணி முடிவுற்றது என்றும், முடிவுற்ற பணிகளுக்கான இறுதித்தொகை 11.01.2002 அன்று வழங்கப்பட்டது என்றும் அதனைத் தொடர்ந்து ரூ.83.68 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றும், திரு எஸ்.கருப்பையா ஒப்பந்தகாரர் தென்கால் புனரமைப்பு பணிகளில் இழப்பீடு ஏற்பட்டதாக கூறி நடுவர் நீதிமன்றம் (Arbitration) சென்றதை தொடர்ந்து அவார்டு தொகை ரூ.61,67,561/- மற்றும் வருடத்திற்கு 10% வட்டியுடன் சேர்த்து ஒப்பந்தகாரருக்கு இழப்பீடு வழங்கிட நடுவர் மன்றத்தால் 20.10.2003 அன்று உத்தரவிடப்பட்டது என்றும் மேற்படி அவார்டினை எதிர்த்து துறை மூலம் தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் Ar.Op. எண்.30/2005-ன்படி வழக்கு நடத்தப்பட்டது என்றும் இந்த வழக்கினை தள்ளுபடி செய்து 12.04.2010-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA(MD) எண்.302/2014-ல் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றும் மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு 09.07.2018-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும் அதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் SLP Civil Diary No. 22136/2020-ல் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றும் இந்த மேல்முறையீட்டு வழக்கு 17.12.2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் இந்நிலையில் ஒப்பந்தக்காரருக்கு நடுவர் மன்ற தீர்ப்பின்படி தொகை ரூ.61,67,561/-க்கு ஆண்டுக்கு 10% வட்டியுடன் சேர்த்து வழங்குவதற்கான கணக்கீடு செய்து ரூ.1,67,52,813/-க்கு ஒப்பளிப்பு அளிக்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார் என்றும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை தெரிவித்துள்ளார்.

4. மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரது கருத்துரு தொடர்பாக நடுவர்மன்ற தீர்ப்புத் தொகை ரூ.61,67,561/- மற்றும் 30.11.2021 வரை வட்டித் தொகை ரூ.1,05,85,252/- சேர்த்து மொத்த தொகை ரூ.1,67,52,813/க்கான அரசாணை மற்றும் நிதி

ஒதுக்கீட்டினை அரசிடமிருந்து பெற்றுத் தருமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்கள் தெரிவித்துள்ளார்.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, அவர்களின் கணக்கீட்டுத்தாளினை ஆய்வு செய்த பின்னர் அவார்டு தொகை மற்றும் அத்தொகைக்கு 31.05.2022 வரை வட்டியுடன் பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது :

| வ. எண். | விபரம் | கால அளவு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | ஆர்பிட்ரேசன் தீர்ப்பு அவார்டு தொகை | | 61,67,561.00 |
| 2. | 10% வட்டி கணக்கீடு | | |
| | வட்டித்தொகை<br>20.10.2003 முதல் 31.10.2003 முடிய | 12 நாட்கள் | 20,277.00 |
| | 01.11.2003 முதல் 31.12.2003 முடிய | 2 மாதம் | 1,02,793.00 |
| | 01.01.2004 முதல் 31.12.2004 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2005 முதல் 31.12.2005 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2006 முதல் 31.12.2006 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2007 முதல் 31.12.2007 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2008 முதல் 31.12.2008 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2009 முதல் 31.12.2009 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2010 முதல் 31.12.2010 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2011 முதல் 31.12.2011 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2012 முதல் 31.12.2012 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2013 முதல் 31.12.2013 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2014 முதல் 31.12.2014 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2015 முதல் 31.12.2015 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2016 முதல் 31.12.2016 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2017 முதல் 31.12.2017 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2018 முதல் 31.12.2018 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2019 முதல் 31.12.2019 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2020 முதல் 31.12.2020 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2021 முதல் 31.12.2021 முடிய | 12 மாதம் | 6,16,756.00 |
| | 01.01.2022 முதல் 31.05.2022 முடிய | 5 மாதம் | 2,56,981.00 |
| | | | 1,14,81,659.00 |

| | | |
|---|---|---|
| நடுவர்மன்ற தீர்ப்பின் தொகை | - | ரூ.61,67,561/- |
| வட்டி 20.10.2003 முதல் 31.05.2022 வரை | - | ரூ.1,14,81,659/- |
| மொத்தம் | - | ரூ.1,76,49,220/ |

6. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை மேலே பத்தி 5-ல் உள்ள திருத்திய கணக்கீட்டுத்தாளின்படி தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி அமைப்பில் தெற்கு பிரதான வாய்க்கால் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்துவது தொடர்பாக நடுவர் மன்றத் தீர்ப்பின் தொகை ரூ.61,67,561/- மற்றும் 31.05.2022 வரையிலான காலத்திற்கு வட்டி ரூ.1,14,81,659/- ஆக மொத்தம் ரூ.1,76,49,220/-க்கு உரிய நிதி ஒதுக்கீடு மற்றும் அரசாணையை பெற்றுத்தருமாறு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை அவர்கள் கோரியுள்ளார்.

7. மேற்கண்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பெறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர், அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி அமைப்பில் தெற்கு பிரதான வாய்க்கால் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தவது தொடர்பாக நடுவர் மன்றத் தீர்ப்பின் தொகை ரூ.61,67,561/- மற்றும் 31.05.2022 வரையிலான காலத்திற்கு வட்டி ரூ.1,14,81,659/- ஆக மொத்தம் ரூ.1,76,49,220/-க்கு (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஆறு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து இருநூற்று இருபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

4701 – நடுத்தர பாசனத் திட்டங்கள் குறித்த மூலத்தனச் செலவு – 01 – தாமிரபரணி வடிநிலம் – 800 ஏனையச் செலவு – மாநிலச் செலவினங்கள் CA – கால்வாய்கள் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்

(IFHRMS த.தொ.கு.: 4701 – 01 – 800 – CA – 416 01)

K – வைப்பீடுகள் (ம) முன்பணங்கள் (B) வட்டி பெறா வைப்பீடுகள் - 8443 00 உரிமையியல் வைப்பீடுகள் – 104 உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் - AA – உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் – 801 – வரவுகள் – 02 வட்டி பெறாதவை/

(IFHRMS த.தொ.கு.: 8443 – 00 – 104 – AA – 80102 (வரவுகள்))

9. மேலே பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,76,49,220/- 2022 - 2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022 – 2023-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்யவிருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 7-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட முதன்மைத் தலைமைப் பொறியாளர்

மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022-2023ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் / துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை நிதித் (பொ.ப.-2 / வ.செ.பொ.-I) துறைக்குத் தவறாமல் அனுப்புமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), நீர்வள ஆதாரத்துறை, சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. அரசு ஆணை கிடைக்கப்பெற்ற ஒருவாரத்திற்குள் மேலே பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று வழங்கப்படவேண்டும் எனவும், அத்தகவலை நடுவர் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.53507/ பொ.ப-II/2022, நாள்.05.01.2023 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2218 (இரண்டாயிரத்து இருநூற்று பதினெட்டு) பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No. 2023012218).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தீப் சக்சேனா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

முதன்மைத் தலைமைப் பொறியாளர்மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது) நீர்வள ஆதாரத்துறை சென்னை-5.
தலைமைப்பொறியாளர், நீர்வளத்துறை, ,மதுரை மண்டலம், மதுரை-2.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி.
முதன்மை மாநில கணக்குத் தலைவர், (கணக்குகள் மற்றும பணிவரவுகள்), சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
உடனுறைத் தணிக்கை அலுவலர் (The Resident Audit Officer, O/o.Principal Accountant General (General and Social Sector Audit), தலைமைச் செயலகம், சென்னை-9.

**நகல்**

நிதி(வ.செ.பொ.II/பொ.ப. II / வ.செ.பொ I / வ.வ. I), சென்னை-9.
நீர்வளத்(அ.ந.மு1) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

18/01/2023

**பிரிவு அலுவலர்**

10/1/2023